## அமுதே! மழையே!!



நீள்விசும்பின் அழுகையென;
ஆர்ப்பரித்த பெருமழையே!
எள்விழவும் இடமின்றி,
நிறைந்திட்ட கோலமென்னே!

புள்ளினங்கள் படபடக்கும்;
போதையொலிக் கேட்கவில்லை!
கேள்வனாம் அந்தச்சூரியனின்
நெடுங்கரங்கள் மறைந்து போக,
கேள்வியின்றிப் பெய்து வைத்தாய்!
கொடுந்துயரம் காட்டிவிட்டாய்!

மூள்கின்ற துன்பமும்தான் - அந்த,
முடிவில்லா இறையவனோ?
தாள்தாங்கும் ஒளிச்சுடரோ!
தன்னிகரில்லாப் பெருநிதியோ!

வாள்தாங்கும் போராட்டம்
வகுத்த இவ் வாழ்வெதற்கு?

கோள் இல்லாப் பிறவியாகி,
கொள்ளும் மரணம்தான்; வாழ்வெனில்,
உயிர் பிறப்புகள்
இம்மண்ணில் எதற்காக?

- கவிவளவன் **27-11-2020 (6.20 AM)**
(விழு.வேர்-பக்-14)

## ஒளியே கதிரே போற்றி போற்றி!!

ஆயிரம் கரங்கள் கொண்டு உலகை
அளக்கின்ற கதிரே போற்றி!
தாயுமாய் தவழ்ந்தே வந்துத்
தளிர்களை வளர்ப்பாய்ப் போற்றி!
மாயினம் மக்கள் யாவும்
வாழ்த்திடும் ஒளியே போற்றி!
தீயென சுட்டாலும் எங்கள்
திவ்விய ஒளியே போற்றி!

சேயுமாய் எங்கள் பூமிச்
சிதறிட நிறைந்தாய் பொற்றி!
மாயமாம் உலகியல் என்றே,
உருகிட வைத்தான் எவனோ?
போயிடும் நாட்கள் பின்னே
புலர்ந்திடும் நிலைதான் என்னே!
தாயுடல் நோக வந்துபின்
தனித்துயாம் மாய்வதேனோ!

நீயுமே ஓர்நாள் விண்ணில்
நிகழாமல் போவா யன்றோ!
உயிரும் உடலுமாய் வாழ்வைச்
செய்தவன்தான் யாரவனோ?
மாயும் உயிர்க்கு இப்புவியில்
மேவிடும் இவ்வாழ்வெதற்காம்?
நீயும் உருவாகிட மண்ணில்
நாங்களும் ஏன்தான் வந்தோமோ?

தேயும் உலகியலில் திகழ்ந்திடும்
தெளியாத இவ்வாழ்வெதற்கு?
பாயும் புலிகூட தனக்குப்
பசித்தாலே புசிக்க எழும்!
தேயும் அறிவிதுதான் அறிந்து
தெளியாதோ நன்மனத்தால்!
சேயும் தாயுமாய் சீர்கொண்டோர்,
செத்தே நாளும் அழிவதேனோ!

-- கவிவளவன் 03-04-2020 (சிந்.கோ.பக்-67)

## மனச்சுமை ஏனோ?

காலம் என்பதும் கனவு என்பதும் வாழ வைப்பது!
சீலம் என்பதும் நினைவு சொல்வதும் அழ வைப்பது!
பாலம் கொண்டு மனத்தில் நல்ல பரல்கள் கோத்திடில்,
ஆலம் விழுதாய் மண்ணைத் தொட்டு வாழ்வை நிலைக்கும்!
கோலம் இதுவெனக் குமுறி அழாதீர் வாழ்வைச் சுவைப்பீர்!
நீலம் என்றே வானை நம்பும் நிலையா வாழ்விதிலே,
தாளம் தப்பி இறப்பபைத் தவிர்க்கும் மாயோன் விதியுண்டோ?
மூலம் அறியா முடிவை நோக்கும் வாழ்வு இதுவன்றோ!

**- கவிவளவன்** 12-01-2021 (குறும்.பா-பக்-10)

### வேளாண்மை vs கணினி

கண்களும் துழாவ;
கைவிரல் தவழ,
கணினியின் ஆக்கம்;
பையை நிரப்பும்!
மேழி அழுந்த
மண்ணைக் கிளறி,
கையும் காலும்
சகதியில் புரள,
விளையும் நெல்லோ,
வயிற்றை நிரப்பும்!



# நீதான் இறையோ?

உலகாளும் பெருநிதியே உன்பெயர்தான் இறையோ!
இறப்புக்கும் பிறப்புக்கும் இடையே ஏனிந்த வாழ்வோ!
தோன்றலும் மறைதலும் தொடர் எனில் ,ஏனிந்த கூத்தோ!

யார் இட்ட விதியோ! பிறத்தல் வலியோ!
இறத்தல் மகிழ்வோ! அல்லது இதுவோ அதுவோ!
ஒளிரும் ஞாயிறும் ஓர் நாள் மாய்ந்திடப்,

பிரிந்தவை யாவும் அதனும் அமிழ்ந்திடக் காலம்
எதிர்திசை செல்லும் என்பதே அறிவியல்!
மண்ணில் படைப்புகள் மரணிக்கும் போது ,

ஏதோ ஒன்று பிரிவதாய் உணர்கிறோம்!
அதனை இயக்கும் இயங்கு சக்தியே!
நீதான் காலம் எனும் கருப் பொருளோ!

கனவாய் நிறையும் இறையோ!
பிறப்பும் இறப்பும் இயன்நிலை யாயின்;
பிறப்புக்கு முன்னும், இறப்புக்குப் பின்னும்,

என்ன நிகழ்கிறது? நிலையான உயிரோடு,
நிலையான நீ நிகழ்த்தும்
இந்த ஆட்டத்தின் எல்லைதான் எதுவோ?

**கவிவளவன்**
**2/9/2020, 6:17 am** (விழு.வே-பக்-15)

# அன்பால் நிறைக!

அழகாக கதிரெழுவான்;
ஆன்ற இருள்தான் கலைய!
இதமாகத் தென்றல் தழுவி,
ஈடில்லா சுகத்தை நல்கும்!
உன்னதக் காலைப் பொழுதாம்!
ஊஞ்சலில் மனம் ததும்பும்!
எண்ணிய எண்ணம் யாவும்,
ஏற்றமாய் வளர்தல் காண்போம்!
ஐயனாம் இறைவன் தன்னை;
ஒப்பிலா மணியாய் வியந்து,
ஓங்கிடும் அருளில் திளைப்போம்!

**கவிவளவன்** 31-12-2020 5.30 AM
(ம.கீ-பக்-7)

# இந்தநாள் இனியநாள்!

கங்குல் பொழுதகல,
காலையிளம் பரிதி யெழும்!
தங்கும் செவிப்புறத்தே
புள்ளினத்தின் கூக்குரலாம்!
பொங்கும் நறுங்காற்றுப்
பூப்பந்தின் பெருமை சொல்ல,
கனகமணி ஒலிழும்பி
இறைவனுக்கு பூசையென்கும்!
தங்கும் சீர்இன்பம் மேவ
தரணியுளோர் மகிழ்ந்து வாழ்க!

- **கவிவளவன்**

16-08-2020 - 6.00 AM
(ம.கீ-பக்-14)



# வாழ்வெதற்கு?

ஆடும்வரை ஆடுவதும்;
ஆலயத்தில் தேடுவதும்,
மாயவனின் விதியோ!


கூடுவதை விலக்குவதும்;
விலகுவதைத் தேடுவதும்,
விதியாகின்ற ஒருசதியோ!

ஓடுகின்ற வாழ்கையிதில்;
உலாவுகின்ற துன்பங்கள்,
உலகாள்வோன் நிதியோ!

பாடுகின்ற உயிரினங்கள்;
வலுவிழந்து சாவதுமாய்,
வாழ்வெதற்கு மண்மீது?

- **கவிவளவன்** (ம.கீ-பக்-8)

02-12-2020



# குறுகுவீரே!

உறங்கும் விழிக்குள்ளே உறங்கா மனமுண்டு!
உறங்கா மனத்துள்ளே உறங்கும் காயமுண்டு
இறங்கா விடமெனவாய் இருக்கும் நிலையுமுண்டு!
அறமே வாழ்வென்று அணியும் நெஞ்சங்கள்;
அடுத்துக் காண்கின்ற அல்லல்கள் ஏராளம்!
விடுத்த அம்பாய்த் தொடுத்த சொல்லும் தைக்க,
விடுத்தத் தவறை தொடுத்த சொல்லால் மறைக்க,
அடுத்து தன்னை அவனியின் சீராய் நினைக்கும்!
ஆணவம் எழுந்து அறிவைத்தானே மறைத்துப் போகும்!
ஈனராய் இடையில் தூபம்போட்டு அவரைப்புகழ,
வீணராய் நல்மனச் சிந்தையைச் சிதைவில் தள்ள,
கூணராய்ப் புத்தி கொண்டீர் இனிக் குறுகுவீரே!

- **கவிவளவன் (20-08-2020 - 5 AM)**(ம.கீ-பக்-9)

## இந்தநாள் இனிது!

புலர்காலைப் பொழுதிலோர் மயக்கம்! - அது
பொழிந்திட்ட மழைநீரின் தாக்கம்!
அலைமோதி நீரோடி நெய்திட்டச் சூழல்! - அதில்
பூமாதா குளிர்திட்ட கோலம்!
பலமிக்கக் காற்று செய்யும் பரிதாபச் சூழல் - இந்த
மழையால் மண்ணுயிர்கள் காண்பதுதான் இல்லை!
குளமாக நீர்தேங்கித் தொல்லையது ஆதல் - இந்த
மாந்தரது ஆசை தந்த விளைவே!
தளமென்று உடல் வருத்தி தரணியிலே வாழாதீர்! - இந்த
வாழ்க்கையும் நிலையில்லை! வளங்களும் நிலையில்லை!
அலகிலா விளையாட்டை நிகழ்த்தும் மாயவனை அறிவோம்!
இந்த மண்ணில் வாழும்வரை மகிழ்வுடனே வாழ்வோம்.!
- **கவிவளவன்** 19-12-2020 (7.15 AM) (கு.பா-பக்-11)

## வாழ்வின் மயக்கம்!

தோளைத் தாங்கிய கரங்கள்;
வாளைச் சுழற்றிய மனங்கள்!
காலம் சூட்டிய உறவில்,
கற்பனை நிறையா உணர்வு!

ஆலம் விழுதின் மடியில்
ஆடிய கரங்கள் தோற்க;
பாலை நிலத்தில் கேணி,
பகிர்ந்த நிலத்தின் ஊற்று!

சீலம் நிறைந்த மாந்தர்,
சிதறிய அறிவின் கொற்றம்!
யாவும் நிறைந்தே பகரும்,
யதார்த்த வாழ்வின் பயனை!
**(09-05-2020)** (ம.கீ-பக்-11)

## சித்தர்! (கு.பா-பக்-19)

சிந்தையில் அறிவைத் தேக்கி,
சீரிய வாழ்வின் நிலையை;
தந்தைபோல் எளிதாய்ச் சொல்லும்
ஆசான் சித்தர் என்போம்!
மந்திரமும் பொய்யே - அந்த
மாளிகையும் பொய்யே என்பார்.
சிந்தையாய் உன்னுள் உறையும்
சீலனே இறைவன் என்பார்!23-01-2021

## வலி மறப்போம்! (கு.பா-பக்-20)

வாய்சொல் வலிமறந்தோம்!
வஞ்சனைகள் தாம்மறந்தோம்!
மேய்ச்சல் பசுபோலே,
மேதினியில் வாழ்ந்திடுவோம்!
பாய்சல் புலியாக யார்வாழ்ந்து; என்ன பயன்?
ஓய்ச்சல் ஒழிவின்றி
உலகாள்வோர் நிலை என்ன? **04-02-2021**

## மனம்! (கு.பா-பக்-20)

மனமே அறிவின் ஊர்தி
ஆற்றலின் கலன்!
சினமே உடலின் எதிரி
சிறுமையின் தோழன்!
மனமே அன்பைத் தேடு!
ஆண்டவன் தெரிவான்! **04-02-2021**

## பாம்போ!! பழுதோ!!

பழுதென நினைத்தேன்; அது பாம்பாய் தெரியுதடி!
அமுதென நினைத்தேன்; அது விஷமாய் ஆகுதடி!
விதியோ இது வேதனையோ! ?மாதவா அச்சுதா
மனமார வேண்டுகிறேன், வேதனையை நீக்கி விடு
விழிசூழும் வேதனையை நீக்கிவிடு! 24-07-2016

## பேரலை நீங்கிட வாழ்வோம்!

ஆலிலைக் கண்ணனோ! அருந்தவச் செல்வனோ!
சீரலை வாழும் செந்தமிழ் முருகனோ!
பேரலைச் சீண்டா செந்தூர் நாதனோ!
அலைகடல், அல்லிக்கேணி அண்ணலோ!
மாயனோ! மருகனோ! பேரலை மனத்தில்,
நீங்கிட பெரும்புகழ் கொண்டு வாழ்வோம்!
23-01-2021

## வேங்கடவன்! 23-01-2021

அள்ளிக் கொடுக்கும் எங்கள்;
வைகுண்ட வாழ்பதியாம்!
வள்ளல் பெரும் பசுக்கள்,
வளர்த்த கண்ணனவன்;
தெள்ளிய அந்த சிங்கமாயும்,
அல்லிக்கேணி அன்னலாயும்,
உறையும் கள்ளர்பிரான்;
வேங்கடவன் காப்பான் நிறைந்து!